DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.06/2023**

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 08- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | வீட்டுகுடித்தனம் |
| பெயர் | - | காளீஸ்வரி | வட்டம் | - | கேரளாமாநிலம் |
| த/பெ | - | முத்துராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | கொல்லங்கோடு, பாலக்காடு | வயது | - | 34/2025 |
| சாதி | - | | | | |

**<u>08-07-2025</u>**

**( 1-ம் எதிரி ஆஜரில்லை )(2-ம் எதிரி ஆஜர்)**

(1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் எனது அப்பாவார். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. வழக்கின் 1-ம் எதிரி அய்யப்பன் என்பவரை தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக 12-ம் மாதம் 1-ம் தேதி நான் கேரளாவில் வீட்டில் இருந்தபோது மதிய நேரத்தில் என் கணவரின் செல்போனுக்கு தகவல் வந்தது. அதில் எனது அண்ணன் மணிகண்டன் வால்பாறையில் வேலைக்கு சென்ற இடத்தில் மேலிருந்து கீழே விழுந்து முதுகு எலும்பு உடைந்துவிட்டதாகவும் அவரை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்துயிருப்பதாகவும் பின்னர் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார்கள். நாங்கள் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அப்போது என் அண்ணன் சுயநினைவின்றி இருந்தார். பின்னர் 03-12-2022-ம் தேதி சிகிச்சை பலனின்றி மருத்துவமனையிலிலேயே இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி அய்யப்பனை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.